மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் நாள் செவ்வாய்கிழமை
இ.ம.எண்.08/2023
அ.வ.எண்.200/2022

கந்தசாமி,
த/பெ.செங்கோட கவுண்டர் ... மனுதாரர்/5 ம் பிரதிவாதி

/எதிராக/

1. ராமசாமி
த/பெ.செங்கோட கவுண்டர் ... எதிர்மனுதாரர்/வாதி

2. மாவட்ட ஆட்சியர், சேலம்
3. வட்டாட்சியர், மேட்டூர்
4. வருவாய் ஆய்வாளர், மேட்டூர்
5. கிராம நிர்வாக அலுவலர், கொளத்தூர்
6. பழனிசாமி (எ) கருப்பண்ணன்,
7. சின்னசாமி, ... எதிர்மனுதாரர்கள்/1 முதல் 4, 6, 7 பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 13.12.2023 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.M.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.C.ராஜா அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.S.ஹரிநாராயணன் அவர்கள் ஆஜராகியும், 6, 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் M.இந்திரா அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் எவ்வித அறிவுறுத்தலும் இல்லை என மேற்குறிப்பு செய்துள்ள நிலையிலும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151–ன் கீழ் நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

(i) மனுதாரர் மற்றும் 2 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி 1ம் எதிர்மனுதாரர்/வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர், 6, 7 எதிர்மனுதாரர்கள் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் முறையே பங்காளிகள் ஆவர். தாவா சொத்துகள் மனுதாரர், 6, 7 எதிர்மனுதாரர்கள், 1ம் எதிர்மனுதாரர் ஆகியோருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துகளாகும். மேற்படி பூர்வீக சொத்தை தகுந்த வழித்தட பாதைகளுடன் பாகப்பிரிவினை செய்து கொண்டனர். மேற்படி மனுதாரர், 6, 7 எதிர்மனுதாரர்கள் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் பூர்வீகமாக பிரிக்கப்பட்ட தடவழி பாத்தியத்துடன் பட்டா பெற்று அவரவர் குடும்பத்துடன் கூட்டாக அனுபவித்துக் கொண்டு வருகின்றனர்.

(ii) மனுதாரர் தனக்கு சொந்தமான பட்டா நிலத்திற்கு காலங்காலமாக சென்று வந்த பூர்வீக வழித்தடத்தை 1ம் எதிர்மனுதாரர் தனது பட்டா நிலம் எனவும், மேற்படி வழிப்பாதையில் யாரும் செல்லக்கூடாது எனவும் கூறி வழிமறித்தார். மனுதாரர், 6, 7 எதிர்மனுதாரர்களுடன் கிராம நிர்வாக அலுவலரை சந்தித்து முறையிட்டபோது ச.எண்.24/9 வண்டிப்பாதை என தெரியவந்தது. மேற்படி வண்டிப்பாதையிலுள்ள ஆக்கிரமிப்பை அகற்றித் தரக்கோரி மேட்டூர் சார் ஆட்சியருக்கு மனு அளித்தனர். மேற்படி மனுவின்பேரில் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சர்வேயர் மேற்படி தடத்தை அளவீடு செய்த பின்பு கடந்த 13.12.2022ம் தேதியன்று ச.எண்.24/9 வண்டிப்பாதையில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற கொளத்தூர் வருவாய் ஆய்வாளர், காவல் துறையினர், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் சர்வேயர் ஆகியோர் ஆக்கிரமிப்பை அகற்ற அளவீடு செய்த போது, 1ம் எதிர்மனுதாரர் தனது வழக்கறிஞர் மூலம் வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலரிடம் 2 நாட்கள் அவகாசம் கோரினார்.

(iii) பின்பு வழக்கறிஞர் மேட்டூர் வட்டாட்சியரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இரண்டு நாட்கள் அவகாசம் வழங்க கோரியதன் பேரில் ஆக்கிரமிப்பை அகற்றாமல் அரசு அதிகாரிகள் சென்றுவிட்டனர். கடந்த 31.12.2022 அன்று ஆக்கிரமிப்பை அகற்ற

காவல்துறையினர் உதவியுடன் வருவாய்துறையினர் வந்தபோது 1ம் எதிர்மனுதாரரின் வழக்கறிஞர் இது சம்மந்தமாக மேட்டூர் உரிமையியல் நீதிமன்றத்தில் ராமசாமி என்பவரின் பட்டா நிலத்திற்கு இடைக்கால தடை கோரி வழக்கு தொடரப்பட்டுள்ளது எனவும், ச.எண்.24/9 வண்டிப்பாதையை அளவீடு செய்யக்கூடாது எனவும், மேற்படி ஆக்கிரமிப்பை அகற்றக்கூடாது என வருவாய்துறை அலுவலர்களிடம் வாக்குவாதம் செய்து ஆக்கிரமிப்பை அகற்ற வந்த JCB வாகனத்தின் முன்பு வழக்கறிஞர் மற்றும் 1ம் எதிர்மனுதாரரின் குடும்பத்தினர் நின்று கொண்டனர். பின்னர் காவல்துறையினர் மூலம் மேற்படி அளவீடு பணியும், ஆக்கிரமிப்பும் அகற்றப்பட்டது. இருப்பினும் 1ம் எதிர்மனுதாரர் தற்போது மனுதாரரையும், இதர எதிர்மனுதாரர்களையும் வண்டிப்பாதையில் செல்லவிடாமல் தடுத்து வருகிறார்.

(iv) இதனால் பிரதிவாதிகளுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட தடவழிப்பாதை மற்றும் 24/9ல் உள்ள வண்டிப்பாதையை முறையே பயன்படுத்த முடியாததால் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர். மனுசொத்திலுள்ள தடவழியை தவிர வேறு எந்த தடவழியும் இல்லை. பூர்வீக தடவழிப்பாதையையும் 1ம் எதிர்மனுதாரர் வழிவிட மறுத்து விட்டார். எனவே நீதிமன்ற ஆணையரை நியமித்து மனுச்சொத்தை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையரின் துணையுடன் அளந்து அத்துகாட்டி, அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

<u>2) 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

(i) மனு பொய்யானது. உண்மைக்கு புறம்பானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர், 6, 7 எதிர்மனுதாரர்கள், 1ம் எதிர்மனுதாரர் முறையே பங்காளி ஆவர். தாவா சொத்து தாவா சொத்துகள் மனுதாரர், 6, 7 எதிர்மனுதாரர்கள், 1ம் எதிர்மனுதாரர் ஆகியோருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துகளாகும். மேற்படி பூர்வீக சொத்தை தகுந்த வழித்தட பாதைகளுடன் பாகப்பிரிவினை செய்து கொண்டனர். மேற்படி மனுதாரர், 6, 7 எதிர்மனுதாரர்கள் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் பூர்வீகமாக பிரிக்கப்பட்ட தடவழி பாத்தியத்துடன் பட்டா பெற்று அவரவர் குடும்பத்துடன் கூட்டாக

அனுபவித்துக் கொண்டு வருகின்றனர் என்பதை 1ம் எதிர்மனுதாரர் முற்றிலும் மறுக்கிறார். 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தானது பூர்வீக சொத்து இல்லை. A.P. ராமசாமி என்பவரிடமிருந்து 1ம் எதிர்மனுதாரர் கடந்த 1984ம் ஆண்டு ஆவண எண்.117/1984லும், 2004ம் ஆண்டு ஆவண எண்.961/2004 ஆகிய ஆவணங்களின் படி விலைக்கு வாங்கியுள்ளார்.

(ii) மனுதாரர் தனக்கு சொந்தமான பட்டா நிலத்திற்கு காலங்காலமாக சென்று வந்த பூர்வீக வழித்தடத்தை 1ம் எதிர்மனுதாரர் தனது பட்டா நிலம் எனவும், மேற்படி வழிப்பாதையில் யாரும் செல்லக்கூடாது எனவும் கூறி வழிமறித்தார் என்பதும் பொய்யானதாகும். மனுதாரர், 6, 7 எதிர்மனுதாரர்களுடன் கிராம நிர்வாக அலுவலரை சந்தித்து முறையிட்டபோது ச.எண்.24/9 வண்டிப்பாதை என தெரியவந்தது என்பதும், மேற்படி வண்டிப்பாதையிலுள்ள ஆக்கிரமிப்பை அகற்றித் தரக்கோரி மேட்டுர் சார் ஆட்சியருக்கு மனு அளித்தனர் என்பதும், மேற்படி மனுவின்பேரில் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சர்வேயர் மேற்படி தடத்தை அளவீடு செய்த பின்பு கடந்த 13.12.2022ம் தேதியன்று ச.எண்.24/9 வண்டிப்பாதையில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற கொளத்தூர் வருவாய் ஆய்வாளர், காவல் துறையினர், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் சர்வேயர் ஆகியோர் ஆக்கிரமிப்பை அகற்ற அளவீடு செய்த போது 1ம் எதிர்மனுதாரர் தனது வழக்கறிஞர் மூலம் வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலரிடம் 2 நாட்கள் அவகாசம் கோரினார் என்பதும் தவறான சங்கதிகளாகும்.

(iii) வருவாய்துறையினர் அளவீடு செய்யாமல் மனுதாரரின் தூண்டுதலின்பேரில் 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட விவசாய நிலத்தை சேதப்படுத்திவிட்டனர். மேலும் வருவாய்துறையினர் உரிய அறிவிப்பு கொடுக்காமல் சட்ட நடைமுறைகளை முறையாக கடைபிடிக்காமல் செயல்பட்டுள்ளனர் என்பது உண்மை. மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட தடவழிப்பாதையை அவரது பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய கோரி வற்புறுத்தி அதற்கு மறுப்பு தெரிவிக்கவே மனுதாரர், 1ம் எதிர்மனுதாரர் மீது வருவாய்துறையினரிடம் பொய் புகார் அளித்த பின்னரே தடுத்துள்ளார். மனுதாரருக்கு ச.எண்கள்.22/1, 22/2, 21/1, 26/7 வழியே செல்லும் பஞ்சாயத்து சாலை வசதி உள்ளது.

அதனை அவர் பயன்படுத்தாமல் 1ம் எதிர்மனுதாரரை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் காண்பிக்கப்பட்ட சொத்து விபரத்தில் கண்டுள்ள தாவா சொத்திற்கு அருகில் உள்ள வண்டிப்பாதை என வகைப்பாடு செய்யப்பட்ட நிலத்தில் 1ம் எதிர்மனுதாரர் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்பதை நிரூபிக்க மனு செய்திருப்பார்.

(iv) 1ம் எதிர்மனுதாரர் வருவாய்துறையிடம் நிலம் அளவீடு செய்வதற்கு மனு செய்து நிலுவையில் உள்ள நிலையில் வருவாய் துறையினரால் மனுதாரரின் தூண்டுதலின் பேரில் 1ம் எதிர்மனுதாரரின் விவசாய நிலத்தை சேதப்படுத்தினர். ஆணையர் நியமிப்பதில் 1ம் எதிர்மனுதாரருக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை. ஆனால் வருவாய் துறையால் 1ம் எதிர்மனுதாரரின் விவசாய நிலத்தை சேதப்படுத்தியதற்காக நஷ்டஈட்டை யார் வழங்குவது என்றும், ஆணையர் அதனையும் தனி ஷெட்யூலாக அறிக்கையை தாக்கல் செய்வதற்கும் மற்றும் சர்வே எண்கள்.22/1, 22/2, 21/1, 26/7 ல் உள்ள அரசு பாதையும் சேர்த்து அளவீடு செய்து அறிக்கையை தாக்கல் செய்வதற்கு இந்நீதிமன்றத்தில் உத்தரவு பிறப்பிக்க கோரியுள்ளார். எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 1ம் எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை.

<u>4) பிரச்சினை :-</u>

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

<u>5) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) மனுதாரர் தரப்பில் ச.எண்.24/9 வண்டிப்பாதையை 1ம் எதிர்மனுதாரர் தனது பட்டா நிலம் எனவும், மேற்படி வழிப்பாதையில் யாரும் செல்லக்கூடாது எனவும் கூறி வழிமறித்தார் எனவும், பிரதிவாதிகளுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட தடவழிப்பாதை

மற்றும் 24/9 ல் உள்ள வண்டிப்பாதையை முறையே பயன்படுத்த முடியாததால் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர் எனவும், மனுசொத்திலுள்ள தடவழியை தவிர வேறு எந்த தடவழியும் இல்லை எனவும், எனவே நீதிமன்ற ஆணையரை நியமித்து மனு சொத்தை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையரின் துணையுடன் கிராம கணக்குகளை கொண்டு மனுதாரரின் விவசாய நிலங்களுக்கு செல்வதற்கு வேறு ஏதேனும் தடவழி உள்ளதா? என்பது குறித்தும் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரர் வருவாய்துறையிடம் நிலம் அளவீடு செய்வதற்கு மனு செய்து நிலுவையில் உள்ள நிலையில் வருவாய் துறையினரால் மனுதாரரின் தூண்டுதலின் பேரில் 1ம் எதிர்மனுதாரரின் விவசாய நிலத்தை சேதப்படுத்தினர் என்றும், ஆணையர் நியமிப்பதில் 1ம் எதிர்மனுதாரருக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்றும், ஆனால் வருவாய் துறையால் 1ம் எதிர்மனுதாரரின் விவசாய நிலத்தை சேதப்படுத்தியது குறித்து, ஆணையர் அதனையும் தனி ஷெட்யூலாக அறிக்கையை தாக்கல் செய்வதற்கும் மற்றும் சர்வே எண்கள்.22/1, 22/2, 21/1, 26/7 ல் உள்ள அரசு பாதையும் சேர்த்து அளவீடு செய்து அறிக்கையை தாக்கல் செய்வதற்கு இந்நீதிமன்றத்தில் உத்தரவு பிறப்பிக்க கோரியுள்ளது தெரியவருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், 1ம் எதிர்மனுதாரரால், ச.எண்.23/16, ச.எண்.13/15B, ச.எண்.24/4B, ச.எண்.22/11, ச.எண்.24/7 மற்றும் ச.எண்.24/8A ஆகியவற்றிலுள்ள நிலங்கள் தொடர்பாக மனுதாரர் மற்றும் இதர எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதே சமயத்தில் மனுதாரர் தரப்பில் ஆலமரத்துப்பட்டி கிராமத்திலுள்ள ச.எண்.24/9 ல் வண்டிப்பாதை செல்வதாகவும், மேற்படி பூர்வீக வண்டிப்பாதையை 1ம் எதிர்மனுதாரர் தனது பட்டா நிலம் என கூறி ஆக்கிரமிப்பு செய்து, மனுதாரரும், இதர எதிர்மனுதாரர்களும் பயன்படுத்த இயலாத வண்ணம் தடுத்து இடையூறு செய்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iv) அதேபோல் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரரின் தூண்டுதலின் பேரில் 1ம் எதிர்மனுதாரரின் விவசாய நிலத்தை வருவாய்துறையினர் சேதப்படுத்திவிட்டதாகவும், நீதிமன்ற ஆணையர் மேற்படி அதனையும் தனி ஷெட்யூலாக அறிக்கையை தாக்கல் செய்வதற்கும் மற்றும் சர்வே எண்கள்.22/1, 22/2, 21/1, 26/7 ல் உள்ள அரசு பாதையும் சேர்த்து அளவீடு செய்து அறிக்கையை தாக்கல் செய்வதற்கு இந்நீதிமன்றத்தில் உத்தரவு பிறப்பிக்க கோரியுள்ளது தெரியவருகிறது. இருதரப்பு வாதங்களையும் கருத்தில் கொள்கையில், ச.எண்.24/9 ல் உள்ள வண்டிப்பாதையை 1ம் எதிர்மனுதாரர் தனது பட்டா நிலம் என தடுப்பதாக அசல் வழக்கில் 5ம் பிரதிவாதியான மனுதாரர் தரப்பில் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளதை கருத்தில் கொள்கையில், மேற்படி மனுதாரரின் எதிர்வாதம் வாதி/1ம் எதிர்மனுதாரரால் மறுக்கப்பட்டுள்ளதையும் கருத்தில் கொள்கையில், மேற்படி சங்கதிகளை நிரூபிக்கும் நிரூபண சுமையானது மனுதாரரையே சார்ந்தது எனவும், அதனால் மேற்படி சங்கதிகளை நிரூபிக்க மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு வழங்க வேண்டியது அவசியம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(v) தற்போது இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொள்கையில், தாவா சொத்துகளிலுள்ள 1ம் எதிர்மனுதாரரின் அமைதியான சுவாதீனத்திற்கு மனுதாரர் மற்றும் இதர எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்தனரா? என்பதே இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையாகும். இருப்பினும், 1ம் எதிர்மனுதாரர் வருவாய் துறையினர் தாவா சொத்துகளின் அருகிலுள்ள வழித்தடத்தின் ஆக்கிரமிப்பை அகற்றுவதாக கூறி 1ம் எதிர்மனுதாரரின் விவசாய நிலத்தையும் சேர்த்து சேதப்படுத்திவிட்டதாக கூறும் நிலையிலும், சர்வே எண்கள்.22/1, 22/2, 21/1, 26/7 ல் உள்ள அரசு பாதையும் சேர்த்து அளவீடு செய்ய வேண்டும் என தெரிவித்துள்ளதை கருத்தில் கொள்கையிலும், தாவா சொத்துகளின் அருகில் 1ம் எதிர்மனுதாரர் கூறுவது போல் பாதை ஏதேனும் நிலையில் உள்ளதா? அவ்வாறு உள்ளதெனில், அதன் நீள அகலங்கள் குறித்தும், மேற்படி பாதையை ஒட்டியுள்ள 1ம் எதிர்மனுதாரரின் பட்டா நிலத்தில் ஏதேனும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளதா? அவ்வாறெனில் சேதம் விளைவிக்கப்பட்ட பகுதியின் அளவுகள் குறித்தும், அதேபோல் ச.எண்.24/9 ல் வண்டிப்பாதை ஏதேனும் உள்ளதா? என்பது குறித்தும், அவ்வாறு உள்ளதெனில் அதன்

நீள அகலங்கள் குறித்தும், சர்வே எண்கள்.22/1, 22/2, 21/1, 26/7 ல் உள்ள அரசு பொதுப்பாதையின் அளவு குறித்தும் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்யும் அறிக்கையானது இவ்வழக்கில் தரப்பினரிடையே உள்ள பிரச்சனைகளுக்கு முழுமையான ஒரு தீர்வு காண்பதற்கு உதவியாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(vi) அதே சமயத்தில் சர்வே எண்.24/9 ல் உள்ள வண்டிப்பாதையை அளந்து அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோரி மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், இதே மனுவில் 1ம் எதிர்மனுதாரர் தாவா சொத்துகளின் அருகிலுள்ள வண்டிப்பாதையிலுள்ள ஆக்கிரமிப்பை அகற்றுவதாக கூறி 1ம் எதிர்மனுதாரரின் பட்டா நிலத்திலுள்ள விவசாய நிலத்தையும் சேர்த்து சேதப்படுத்திவிட்டதால் மேற்படி அளவுகள் குறித்தும் நீதிமன்ற ஆணையரை அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடக் கோரியுள்ளதை கருத்தில் கொள்கையில், சர்வே எண்கள்.22/1, 22/2, 21/1, 26/7 ல் உள்ள அரசு பொதுப்பாதையின் அளவு குறித்து அறிக்கை தாக்கல் செய்ய கோரியுள்ளதை கருத்தில் கொள்கையிலும், இம்மனுவில் நீதிமன்ற ஆணையரின் கட்டணத்தை மனுதாரரும், 1ம் எதிர்மனுதாரரும் சமமாக பகிர்ந்து செலுத்த வேண்டும் என இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

முடிவாக, திரு.V.ரணதேவ் வழக்கறிஞர் நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்படுகிறார். கற்றறிந்த நீதிமன்ற ஆணையாளர், தாவா சொத்துகளை பார்வையிட்டு அதனை தல ஆய்வு செய்து, தாவா சொத்துகளின் அருகில் தடவழி ஏதேனும் உள்ளதா? என்பது குறித்தும், மேற்படி தடவழியை ஒட்டி அமைந்துள்ள தாவா சொத்துகளில் ஏதேனும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளதா? என்பது குறித்தும், சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது எனில் அதன் அளவுகள் குறித்தும், அதேபோல் ச.எண்.24/9 ல் வண்டிப்பாதை ஏதேனும் உள்ளதா? என்பது குறித்தும், மேற்படி வண்டிப்பாதையில் ஆக்கிரமிப்புகள் ஏதேனும் உள்ளதா? என்பது குறித்தும், மேற்படி வண்டிப்பாதையின் அமைப்பு, நீள, அகலங்கள் குறித்தும், மேற்படி வண்டிப்பாதையை தவிர்த்து மனுதாரர் தனது சொத்திற்கு செல்வதற்கு வேறு மாற்றுத்தடவழி உள்ளதா?

என்பது குறித்தும், அதேபோல் சர்வே எண்கள்.22/1, 22/2, 21/1, 26/7 ஆகியவற்றில் செல்லும் பஞ்சாயத்து சாலையின் அளவு குறித்தும், நில அளவையர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோரை கொண்டு கிராம கணக்குகள் மற்றும் இருதரப்பினரும் ஏதேனும் உரிமை ஆவணங்களை முன்னிலைப்படுத்தினால் அவற்றின் அடிப்படையிலும் அளந்து, அறிக்கை, வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் கட்டணம் ரூ.9000/– என நிர்ணயம் செய்யப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் கட்டணத்தை மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் சரிசமமாக பகிர்ந்து அதனை நேரடியாக நீதிமன்ற ஆணையருக்கு செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. கற்றறிந்த நீதிமன்ற ஆணையாளர் இருதரப்பினருக்கும் உரிய அறிவிப்பு வழங்கியதற்கு பின்னிட்டு தாவா சொத்துகளை பார்வையிட வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் இயன்ற அளவு காலதாமதமின்றி விரைவாக அறிக்கை தாக்கல் செய்வதற்கு ஆவண செய்ய அறிவுறுத்தப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய அழைக்க.26.02.2024.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.01.23 15:51:14 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.01.23 15:51:24 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.